# இலங்கை பரீட்சைத் திணைக்களம்
# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2020 ஒகஸ்ட்
# புதிய, பழைய பாடத்திட்டங்கள்

இம்முறை பரீட்சையானது புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் என இரு பரீட்சைகளாக நடைபெறும். விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தும்போது தான் தோற்றும் பாடத்திட்டம் எதுவெனச் சரியாக இனங்கண்டு, அதற்கேற்ப விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்த வேண்டும். **இம்முறை பரீட்சைக்காக சகல விண்ணப்பதாரிகளும் நிகழ்நிலை (online) முறைமையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.** அதன் அச்செடுத்த பிரதியொன்றை தபால் மூலம் அனுப்பி வைப்பது கட்டாயமானது. விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் தரப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் 2020 பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 02 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை முழுமையாக நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு தமது விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்த வேண்டும். விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தெரிவு செய்த **நகரத்தையும் பாடங்களையும்** விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடும்போது சரியான எண்களைக் குறிப்பிடுவதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். ஆகக் கூடுதலாக பிரதான பாடங்கள் 03க்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இடமளிக்கப்படும்.

02. **விண்ணப்பப்படிவம்**

அறிவுறுத்தல்களுக்கமைய நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி அதனை அச்சுப்பிரதியெடுத்து ஒரு பிரதியை உங்களது கையொப்பத்துடனும் உங்களது பிரிவுக்குரிய கிராம அலுவலரின் கையொப்பத்துடனும் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவும். **அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்காவிடின் உங்களது பரீட்சைக்குத் தோற்றும் தகைமை இரத்துச் செய்யப்படும்.**

| |
|---|
| பாடசாலையில் இருந்து பாடசாலை விடுகைப் பத்திரத்தைப் பெற்றவர்கள் மட்டுமே தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக தோற்ற முடியும். பாடசாலையில் கற்றுக்கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தோற்றினார் என அறியப்படுமிடத்து பரீட்சைப் பெறுபேற்றை இரத்து செய்து எதிர்வரும் காலங்களில் பரீட்சைகளுக்குத் தோற்றத் தடை விதிக்கப்படும். |

2.1 **முறைமைக்குள் பிரவேசித்தல்**

(i) விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்கள www.doenets.lk உத்தியோக பூர்வ இணையத்தளத்தினுள் நுழைக.

(ii) "Online Application" எனும் தளத்தை (Tile) தெரிவு செய்க. (Click)

(iii) "G.C.E.A/L - 2020 Application for student Registration" (Private) எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்வதன் மூலம் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

(iv) உங்களின் தனிப்பட்ட தகவல்கள், மொழிமூலம், பரீட்சைக்குத் தெரிவு செய்த நகரம், பாடத்திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய பின்னர் தோற்றவுள்ள பாடங்களை உள்ளடக்க முடியும்.

2.2 (அ) **(13) பொது ஆங்கிலம்**

மூன்று பிரதான பாடங்களுடன் பொதுச் சாதாரண பரீட்சைக்கு மேலதிகமாக பொது ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும். **இப்பாட பெறுபேறு பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு பயன்படுத்தப்படமாட்டாது.** இப்பாடத்திற்காகப் பெறும் தரம் க.பொ.த.(உயர்.தர) பரீட்சைப் பெறுபேற்று சான்றிதழில் குறிப்பிடப்படும்.

இப் பாடத்தை ஒரு பாடமாக மட்டும் தோற்றுவதற்கும் இடமளிக்கப்படும்.

(ஆ) **(12) பொதுச் சாதாரண பரீட்சை**

எவராயினும் ஒரு விண்ணப்பதாரி இலங்கையின் பல்கலைக்கழகமொன்றிற்கு அனுமதி பெறும் எண்ணத்துடன் இருப்பாராயின் அவர் இப்பாடத்தில் கட்டாயமாகச் சித்தியடைய வேண்டும்.

(இ) **செய்முறைப் பரீட்சையுடன் கூடிய பாடங்கள்**

பாட இலக்கம் 28, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 65, 66 ஆகிய பாடங்களுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் செய்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இவ்விரு வகைப் பரீட்சைகளுக்கும் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம் இப்பாடங்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வழங்கப்படும்.

செய்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டையில் குறிப்பிட்ட திகதியில் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். உரிய தினத்தில் தோற்றத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு அப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு வேறு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

2.3 2020.03.02ஆம் திகதிக்குப்பின் இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க முடியாது. விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்த பின் 28 செ.மீ X 21 செ.மீ அளவிலான A4 வெள்ளைத்தாளின் இரு பக்கங்களிலும் அச்சுப் பிரதி எடுத்தல் வேண்டும். **விண்ணப்பப்படிவத்தை 2020.03.02 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், த.பெ 1503, கொழும்பு** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

2.4 **ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்ப வேண்டும். ஒன்றுக்குமேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பினால் சகல விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் அப்பரீட்சார்த்தி தொடர்பாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளை வழங்கிய பின்னராயினும் இப்படியான முறைகேடான செயல் தெரியவரின் பெறுபேற்றை இரத்துச் செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.**

03. **பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்**

பரீட்சைக் கட்டணம் தபால் அலுவலகத்தின் மூலமோ வங்கி அட்டைகள் (Online Payment) மூலமோ மேற்கொள்ள வேண்டும்.

3.1 தபால் அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்வீர்களாயின் “Payment method” இன் கீழுள்ள "Pay by post" எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்க. முத்திரை மூலமோ காசுக்கட்டளை மூலமோ பரீட்சைக் கட்டணத்தை செலுத்த முடியாது. பரீட்சைக் கட்டணமாக உரிய தொகையை அண்மையிலுள்ள தபால் / உப தபால் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அச்சுப்பிரதியெடுத்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் இல 14 இல் கழராதவாறு ஒட்ட வேண்டும். 2020.02.12ஆம் திகதியிலிருந்து 2020.03.02 வரை இலங்கையின் சகல தபால் / தபால் அலுவலகங்களில் இப்பற்றுச்சீட்டை விநியோகிப்பதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.2 வங்கி அட்டைகள் (credit / debit cards) மூலம் பணம் செலுத்துவதற்காக "Payment method" இன் கீழுள்ள "Pay by credit / debit" நிகழ்ச்சியைத் தெரிவு செய்தல் வேண்டும்.

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கட்டணம் ரூபா | 150/- | 200/- | 250/- | 350/- | 400/- |

இறுதித் திகதிக்கு முன் பற்றுச்சீட்டைப் பெற்றிருப்பினும் இறுதித் தினத்திற்கு பின் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கிறேன்.

04. ஒரு உறையினுள் ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டும் இட்டு அனுப்ப வேண்டும். **அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் “க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை 2020 - ஓகஸ்ட் - நகர எண் ............ நகரம் ............”** எனக் குறிப்பிடப்பட வேண்டும். இக்கோடுகளில் தெரிவு செய்த நகர எண்ணையும் நகரத்தையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். ஏதேனும் நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்கு போதிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இல்லையெனின், அண்மையிலுள்ள நகரத்தில் தோற்றுவதற்கு ஒழுங்கு செய்யப்படும்.

05. நீங்கள் தெரிவு செய்யும் பாடங்களின் பாட **எண்களும்** தெரிவு செய்யும் **நகரமும் நகர எண்ணும்** மிக முக்கியமானது. ஆதலால் **விண்ணப்பப்படிவத்தை தபாலில் சேர்ப்பதற்கு முன்னர் மிகவும் கவனமாக மீண்டும் ஒரு முறை வாசித்து அவற்றில் எழுதப்பட்டுள்ள பாட எண்களையும் நகர எண்ணையும் மற்றும் விவரங்களையும் சரி பார்ப்பதுடன், இன்னொருவரைக் கொண்டு பரீட்சித்துப் பார்த்தல் மிக முக்கியமானதாகும்.**

06. உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்கள் தொடர்பாக ஏதாவது அறிந்து கொள்ள வேண்டுமாயின் உங்களின் அனுமதி அட்டை கிடைத்தவுடனே அவ் அனுமதி அட்டையை எடுத்துக் கொண்டு பரீட்சைத்திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு சமூகமளித்தல் வேண்டும்.

07. **தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது நிரந்தர வதிவிட முகவரியை குறிப்பிட வேண்டுமென்பதுடன் தாம் கல்விகற்ற தனியார், சர்வதேச பாடசாலைகளின் பெயர், முகவரியை உள்ளடக்கலாகாது. அவர்கள் தமது தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்தையும் உள்ளடக்கல் வேண்டும்.**

08. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சார்த்திகள் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் தோற்றும் போதும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தை கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரிகள் இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை கிராம அலுவலர் ஊடாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்து தமது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

09. இப் பரீட்சை தொடர்பாக அரச பாடசாலைகளிலிருந்தும்/ கட்டணம் அறவிடும் / அறவிடாத அரச அனுமதி பெற்ற தனிப்பட்ட பாடசாலைகளிலிருந்தும் / அனுமதி வழங்கப்பட்ட பிரிவெனாக்களிலிருந்தும் முதலாவது, இரண்டாவது முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தல் வேண்டும். அவ்வாறு கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படும்.

10. இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் இருப்பின் "**Candidats with Special Needs** " இன் கீழே தகவல்களை பூர்த்தி செய்வது கட்டாயமானது.

**பார்வைக் குறைபாடு /கேட்டற் குறைபாடு /வேறு விசேட தேவைகளுள்ள** விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் சிவப்பு நிறத்தினால் **“பார்வைக் குறைபாடு / கேட்டற் குறைபாடு / வேறு விசேட தேவையுள்ள விண்ணப்பதாரி”** என குறிப்பிடுக.

**குறிப்பு:** செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளிக்கப்படமாட்டாதென்பதுடன் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவும் மாட்டாது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து எந்த ஒரு வினாப்பத்திரத்திற்கும் அல்லது ஒரு வினாப்பத்திரத்தின் ஒரு பகுதிக்கும் தோற்றாத பரீட்சார்த்திகள் மட்டும், பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகளாகக் கருதப்படுவார்கள். அத்தகைய பரீட்சார்த்திகளின் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பரீட்சை எத்தனம் (Attempt) செல்லுபடியற்றதாகிவிடாது என்பதால் அதற்காக எந்த வைத்திய அத்தாட்சிப் பத்திரமும் அவசியமற்றது. இவர்கள் தமது அனுமதி அட்டையைப் பாதுகாப்பாக வைத்திருப்பதே எந்த ஒரு பாடத்திற்கும் பரீட்சார்த்தி தோற்றவில்லை என்பதனை நிரூபிப்பதற்கான ஒரே ஆதாரமாகும்.

**இப்பரீட்சை மூலம் புதிய, பழைய பாடத்திட்டங்களுக்கமைய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யும் முறை தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பின்னர் அறிவிக்கப்படும்.**

மேற்படி விடயம் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் : 011 - 2784208 / 0112784537

தொலைநகல் இலக்கம் : 011 - 2784422

பி.சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

தொடர்பு எண் : 6/3/AL/2020
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
த.பெ.1503, கொழும்பு.
2020.02.01

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2020 ஒகஸ்ட்
## விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

01. **முறைமைக்குள் பிரவேசித்தல்**

1.1 விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்கள www.doenets.lk உத்தியோக பூர்வ இணையத்தளத்தினுள் நுழைக.

1.2 "online application" எனும் Tile ஐத் தெரிவு செய்க (Click).

1.3 "G.C.E.A/L - 2020 Application for student Registration" (Private) நிகழ்ச்சியைத் தெரிவு செய்வதன் மூலம் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

1.4 உங்களின் தனிப்பட்ட தகவல்கள், மொழிமூலம், பரீட்சைக்குத் தெரிவு செய்த நகரம், பாடத்திட்டத்தை உள்ளடக்கிய பின்னர் தோற்றவுள்ள பாடங்களை உள்ளடக்குக.

02. **Personal Info**

Details of applicant

2.1 NIC No : தேசிய அடையாள அட்டையின் / செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் / செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தின் எண்ணை எழுதி அதன் நிழற் பிரதியை அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டவும். அவ்வாறு தேசிய அடையாள அட்டையின் / செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் / செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தின் நிழற் பிரதி ஒட்டப்படாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் கூடுதல் கவனத்திற் கொள்ளவும்.

2.2 Title ஐத் தெரிவு செய்க.(Rev/Mr/Mrs/Miss)

2.3 Full Name

**பிறப்புச்சான்றிதழிலுள்ளவாறு முழுப்பெயரை ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் எழுதுதல் வேண்டும். முதலெழுத்துக்களுடன் பெயரை எழுத வேண்டாம்.**

உதாரணம் : JEYARASA JEYANTHINI

**90 எழுத்துக்களுக்கும் மேற்பட்டதாயின் அதன் அச்சுப் பிரதியில் முழுப்பெயரையும் குறிப்பிடுதல் வேண்டும்.**

2.4 Date of Birth

**பிறப்புச்சான்றிதழிலுள்ளவாறு பிறந்த திகதியை உள்ளடக்குதல் அல்லது தெரிவு செய்தல்**

2.5 Gender

ஆண் / பெண் என்று குறிப்பிடுவதற்கு ஆண் எனின் "Male" எனவும் பெண் எனின் "Female" எனவும் தெரிவு செய்க.

2.6 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (செல்லிடம்):

தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (தற்போதைய):

மின்னஞ்சல் முகவரி:

2.7 Private Address

முகவரி : நிரந்தர முகவரியை **ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்** குறிப்பிடவும்.

**தற்கால வதிவிட முகவரியையோ/ தனியார்/சர்வதேச பாடசாலையின் முகவரிகளையோ குறிப்பிட வேண்டாம்.**

**அடுத்த செயன்முறைக்காக Next பொத்தானை அழுத்தவும்**

03. **Exam Request**

Additional Details

3.1 Preferd medium of Language

தோற்றும் மொழிமூலம் : தோற்றுவதற்கான மொழிமூலத்தை தெரிவு செய்க.

3.2 District and Town that you wish to be sat for the examination

தெரிவு செய்யும் மாவட்டமும் நகரமும் :

நீங்கள் பரீட்சைக்கு தெரிவுசெய்த மாவட்டத்தையும் நகரத்தையும் தெரிவு செய்க. உங்களால் **பிழையான நகரத்தை நீங்கள் தெரிவு செய்யின் மிகத்தூரத்திலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அனுமதிக்கப்படும் வாய்ப்பு உண்டு**. உரிய நகரங்களும், நகர எண்களும் உள்ளடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நீங்கள் வேண்டிக்கொண்ட பரீட்சை நிலையத்தை பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

3.3 Syllabus selected to be sat for the examination

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பாடத்திட்டத்தை தெரிவு செய்க.

New - புதிய பாடத்திட்டம்　　　　Old - பழைய பாடத்திட்டம்

3.4 Number of attempts examination

நீங்கள் எத்தனையாவது தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகிறீர்கள் என்பதை குறிப்பிடவும்.

3.5 Special needs applicant : (Vision/ hearing/ other)

3.5.1 விசேட தேவையில்லையாயின் "**No**" என்பதைத் தெரிவு செய்க.

3.5.2 நீங்கள் ஏதேனும் ஒரு விசேட தேவையுடைய விண்ணப்பதாரியாயின் "yes" என்பதைத் தெரிவு செய்க. தெரிவு செய்த பின்னர் கிடைக்கப்பெறும் பின்வரும் விடயங்களில் பொருத்தமானதின் கீழ் விவரங்களை உள்ளடக்குக.

- Type of the disability (குறைபாட்டின் தன்மை)

  Braille - பிரேல் விண்ணப்பதாரி

  Hearing - கேட்டற் குறைபாடுடைய விண்ணப்பதாரி

  Vision - பார்வைக் குறைபாடுடைய விண்ணப்பதாரி

  body function/ structure - உடற் குறைபாடுடைய விண்ணப்பதாரி

  Other - வேறு குறைபாடுடைய விண்ணப்பதாரி

- More details about disability - குறைபாடு தொடர்பான வேறு விவரங்கள்
- If special center required , select it - விசேட பரீட்சை நிலையத்தை விண்ணப்பதாயின் அதனைத் தெரிவு செய்க.

**அடுத்த செயல்முறைக்காக Next பொத்தானை அழுத்தவும்**

## 04. Add Subject Infomation

2020 ஆம் ஆண்டு பரீட்சைக்கு அங்கீகரிக்கப்பட்ட பாடங்களும் ஊடகமொழியும்

4.1 கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2016/13 இலக்கமும் 2016.4.26 ஆம் திகதியுடைய சுற்றுநிருபத்திற்கமைவாக பாடங்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். அச் சுற்றுநிருபத்திலுள்ள பாடத்துறைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடத்துறைகளுடன் இணைந்தொழுகாத ஏனைய பாடச்சேர்மானங்களைத் தெரிவுசெய்யும் பட்சத்தில், விண்ணப்பதாரிகள் "குறித்த பாடத்துறை ஒன்றில் அடங்காத" (Non stream) என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுகையில் "நாடளாவிய தரம் (Island Rank) மற்றும் "மாவட்ட தரம்" (District Rank) வெளியிடப்பட மாட்டாது. அச்சுற்றுநிருபத்துக்கு இணைந்தொழுகாத பாடச்சேர்மானங்களைத் தெரிவு செய்வதால் பரீட்சார்த்திகள் முகங்கொடுக்க வேண்டியேற்படும் பிரச்சினைகள் தொடர்பான பொறுப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். இப்பரீட்சார்த்திகள் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பாடப்பட்டியலிலிருந்து தமது பாடங்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். இப்பரீட்சைக்கு மூன்று பிரதான பாடங்களைத் தெரிவுசெய்யவேண்டியதோடு **பல்கலைக்கழகமொன்றில் அனுமதி பெறும் நோக்கமிருப்பின் பொது சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெறுதல் வேண்டும்.** மேற்படி பாடங்களுக்கு மேலதிகமாக பாட எண் 13 பொது ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும்.

4.2 சிங்களம் /தமிழ் /ஆங்கிலம் தேவையாயின் இரு மொழிமூலத்திலும் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

- சிங்களம் / ஆங்கிலம்
- தமிழ் / ஆங்கிலம்

இரண்டு மொழிமூலங்களில் தோற்றும் சந்தர்ப்பத்தில் ஆங்கில மொழிமூலத்திற்கு மேலதிகமாக தோற்றவுள்ள மொழிமூலத்தை தெரிவு செய்க. எக்காரணத்தின் பொருட்டும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிமூலங்களிலும் ஒரே தடவையில் தோற்ற முடியாது.

4.3 **<u>மிகமுக்கியம் :</u>**

i. பௌதிக விஞ்ஞான பாடத்துறையின் கீழ் 07 - கணித பாடத்தைத் தெரிவுசெய்ய முடியாது.

ii. பாட இல 14, 15, 16, 17, 18, 19 ஆகிய பாடங்களுள் **ஒன்றிற்கு** மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

iii. (65) பொறியியற் தொழில்நுட்பவியல் மற்றும் (66) உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆகிய இரண்டு பாடங்களிலும் **ஒரு** பாடத்திற்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

iv. பொறியியற் தொழில்நுட்பவியல் பாடத்திற்கோ உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்திற்கோ விண்ணப்பிப்பவர்கள் மாத்திரம் (67) தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் பாடத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

v. சமயம் மற்றும் நாகரிகம் ஆகிய பாடங்களில் ஏதாவதொரு சமயத்தினை பரீட்சார்த்தி தெரிவு செய்வாராயின் அதனோடு தொடர்புபட்ட நாகரிகப் பாடத்தினை அவர் தெரிவு செய்ய முடியாது. அதே போன்று நாகரிகப்பாடத்தினை தெரிவு செய்வாராயின் அதனுடன் தொடர்புடைய சமய பாடத்தை தெரிவு செய்ய முடியாது.

vi. நடனம் - பாட இல 52 இற்கு விண்ணப்பிக்கும்போது நீங்கள் கற்ற நடன வகையைக் குறிப்பிடவும்.

vii. 54 - கீழைத்தேய சங்கீதம் பாடம் சிங்கள மொழி மூலத்தில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

viii. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை பின்னர் மாற்றம் செய்வதற்கோ அல்லது பரீட்சை மண்டபத்தில் பாட மாற்றங்கள் செய்வதற்கோ அல்லது மேலதிக பாடங்களுக்குத் தோற்றுவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது. அவ்வாறு மாற்றம் செய்து தோற்றியிருப்பின் அப்பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இரத்துச்செய்யப்பட வேண்டி நேரிடும்.

4.4 **சாதாரண பொதுப் பரீட்சை** : விண்ணப்பிப்பதாயின் "Common General Test" எதிரேயுள்ள Yes ஐத் தெரிவு செய்து மொழிமூலத்தையும் தெரிவு செய்க.

4.5 **பொது ஆங்கிலம்** : விண்ணப்பிப்பதாயின் "General English" எதிரேயுள்ள Yes ஐத் தெரிவு செய்க.

4.6 பாடங்களைத் தெரிவு செய்த பின்னர் உரிய பாடங்களுக்கு உரித்தான பாடத்துறை (Stream) உங்களுக்கு திரையில் காட்டப்படும். அது தொடர்பாக உங்கள் அவதானத்தை செலுத்தவும்.

**அடுத்த செயல்முறைக்காக Next பொத்தானை அழுத்தவும்**

## 05. Payment Methods

பரீட்சைக் கட்டணம் தபால் அலுவலகத்தின் மூலமோ வங்கி அட்டைகள் (Online Payment) மூலமோ மேற்கொள்ள வேண்டும்.

5.1 தபால் அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்வீர்களாயின் “Payment method” இன் கீழுள்ள “Pay by post” எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்க. **முத்திரை மூலமோ காசுக்கட்டளை மூலமோ** பரீட்சைக் கட்டணத்தை செலுத்த முடியாது. பரீட்சைக் கட்டணமாக உரிய தொகையை அண்மையிலுள்ள தபால் / உப தபால் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அச்சுப்பிரதியெடுத்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் இல 14 இல் கழராதவாறு ஒட்ட வேண்டும். 2020.02.12ஆம் திகதியிலிருந்து 2020.03.02 வரை இலங்கையின் சகல தபால் / தபால் அலுவலகங்களில் இப்பற்றுச்சீட்டை விநியோகிப்பதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.2 வங்கி அட்டைகள் (credit / debit cards) மூலம் பணம் செலுத்துவதற்காக "Payment method" இன் கீழுள்ள "Pay by credit / debit cards" நிகழ்ச்சியைத் தெரிவு செய்தல் வேண்டும்.

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கட்டணம் ரூபா | 150/- | 200/- | 250/- | 350/- | 400/- |

மனைப்பொருளியல், பொறியியற் தொழில்நுட்பவியல், உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்கு ரூபா 300/- வீதம் செய்முறைப் பரீட்சைக்காக செலுத்தப்படல் வேண்டும். இக்கட்டணமானது செய்முறைப் பரீட்சைக்கு அழைப்பு வரும்போது மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

**அடுத்த செயல்முறைக்காக செல்ல Next பொத்தானை பயன்படுத்துக.**

## 06. Declaration of the applicant

விண்ணப்பதாரியின் உறுதியுரை தொடர்பாக I agree என்பதை click செய்யவும். விண்ணப்பப்படிவத்தை அச்சிடுவதற்கு submit ஐ பயன்படுத்தவும். அச்சு எடுத்த பிரதி பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படாவிடின் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

## 07. உள்ளடக்கிய விவரங்களை மாற்றம் செய்தல் (Edit)

7.1 ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டியேற்படின் "submit" செய்வதற்கு முன் செய்தல் வேண்டும்.

7.2 விண்ணப்பப்படிவத்தை "submit" செய்த பின்பு எந்த மாற்றமும் செய்ய முடியாது.

7.3 அச்சுப் பிரதியிலும் (print out copy) எம்மாற்றங்களும் செய்யலாகாது.

## 08. பரீட்சார்த்தியின் உறுதிக்கூற்று

மிகவும் கவனமாக வாசித்தறிந்த பின்னர் இங்கு பரீட்சார்த்தி கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை அச்சுப்பிரதி எடுத்த பின்னர் முழுப்பெயர் சிங்களம் / தமிழ் மொழியில் பிறப்புச் சான்றிதழிலுள்ளவாறு விண்ணப்பதாரியால் பெயர் எழுதப்படல் வேண்டும்.

உ+ம் : THIRUCHELVAM SANJEEVAN

09. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பப்படிவத்தில் இருக்கும் கையொப்பத்தை அவர்களது வதிவிடம் அமைந்துள்ள கிராமத்திற்குரிய கிராம அலுவலரால் மாத்திரமே அத்தாட்சிப்படுத்த வேண்டும். அதற்காக தேசிய அடையாள அட்டையை / செல்லுபடியாகும் கடவுச்சீட்டை/ சாரதி அனுமதிப் பத்திரத்தையும் அதன் நிழற்பிரதியையும் கொண்டு செல்லல் வேண்டும்.

10. **விண்ணப்பப்படிவத்தை நிராகரித்தல்:**

1. பாடசாலையிலிருந்து விலகியவர்கள் மட்டுமே தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாகக் கருதப்படுவர். பாடசாலையில் கற்றுக்கொண்டு, தனிப்பட்ட விண்ணப்பதாரியாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்ற தடைவிதிக்கப்படுவர்.
2. இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பினும், இறுதித்திகதிக்குப் பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.
3. தற்கால வதிவிட முகவரியையோ, சர்வதேச பாடசாலையின் முகவரிகளையோ, தனியார் குறிப்பிட்டிருப்பின் நிராகரிக்கப்படும்.
4. அச்சுப்பிரதியெடுக்கப்பட்ட பிரதியை பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்காத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| பாடம் | பாட எண் | பாடம் | பாட எண் |
|---|---|---|---|
| பௌதிகவியல் | 01 | பௌத்த நாகரிகம் | 45 |
| இரசாயனவியல் | 02 | இந்து நாகரிகம் | 46 |
| கணிதம் | 07 | இஸ்லாமிய நாகரிகம் | 47 |
| விவசாய விஞ்ஞானம் | 08 | கிரேக்க உரோம நாகரிகம் | 48 |
| உயிரியல் | 09 | கிறிஸ்தவ நாகரிகம் | 49 |
| இணைந்த கணிதம் | 10 | சித்திரக்கலை | 51 |
| உயர் கணிதம் | 11 | நாட்டியம் (தேசிய - கண்டி) | 52A |
| பொதுச் சாதாரண பரீட்சை | 12 | நாட்டியம (தேசிய - தாழ்நாட்டு) | 52B |
| பொது ஆங்கிலம் | 13 | நாட்டியம் (தேசிய - சப்ரகமுவ) | 52C |
| குடிசார்த் தொழில்நுட்பவியல் | 14 | நாட்டியம் (பரதம்) | 53 |
| பொறிமுறைத் தொழில்நுட்பவியல் | 15 | சங்கீதம் (கீழைத்தேயம்) | 54 |
| மின், இலத்திரன், தகவல் தொழில்நுட்பவியல் | 16 | சங்கீதம் (கர்நாடகம்) | 55 |
| உணவுத் தொழில்நுட்பவியல் | 17 | சங்கீதம் (மேலைத்தேயம்) | 56 |
| விவசாயத் தொழில்நுட்பவியல் | 18 | நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) | 57 |
| உயிர் வளத் தொழில்நுட்பவியல் | 19 | நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | 58 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | 20 | நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) | 59 |
| பொருளியல் | 21 | பொறியியற் தொழில்நுட்பவியல் | 65 |
| புவியியல் | 22 | உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் | 66 |
| அரசியல் விஞ்ஞானம் | 23 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | 67 |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | 24 | சிங்களம் | 71 |
| இந்திய வரலாறு | 25A | தமிழ் | 72 |
| ஐரோப்பிய வரலாறு | 25B | ஆங்கிலம் | 73 |
| நவீன உலக வரலாறு | 25C | பாளி | 74 |
| மனைப்பொருளியல் | 28 | சமஸ்கிருதம் | 75 |
| தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் | 29 | அரபு | 78 |
| வணிகப் புள்ளிவிபரவியல் | 31 | மலாய் | 79 |
| வணிகக் கல்வி | 32 | பிரெஞ்சு | 81 |
| கணக்கீடு | 33 | ஜேர்மன் | 82 |
| பௌத்தம் | 41 | ருசியன் | 83 |
| இந்து சமயம் | 42 | ஹிந்தி | 84 |
| கிறிஸ்தவம் | 43 | சீன மொழி | 86 |
| இஸ்லாம் | 44 | ஜப்பானிய மொழி | 87 |